DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 9 Saravanan** |
| Father's Name | ஆறுமுகம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 24/10/2024

**முதல் விசாரணை**

12.09.2021 அன்று மாலை 4.00 மணியளவில் போலிசார் சம்பவ இடம் வந்தார்கள். சம்பவம் குறித்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள், சம்பவ இடத்தை வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் அந்தோணிராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது **ம.த.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

எங்கள் ஊரில் உள்ள கவுன்சிலர் ரவி என்பவரை தெரியும். போலிசாருடன் கவுன்சிலர் ரவியும் வந்தாரா என்றால் கடைசியாக வந்தார். கவுன்சிலர் ரவியை விசாரித்தார்களா என்றால் ரவியை விசாரித்தார்கள் ஆனால் கையொப்பம் எதுவும் பெறவில்லை. கவுன்சிலர் ரவி என்னிடத்திலும், அந்தோணிராஜ் இடத்திலும் கையெழுத்து வாங்கும்படி சொன்னார் என்றால் சரிதான். என்னிடம் ஆய்வாளர் சாட்சி கையொப்பம் பெற்றார். அதன்பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. நீங்கள் காவல்நிலையம் சென்று கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றாலும் வழக்கிற்காக சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.